[1982 மார்ச் 11]

திரு. வெ. இராஜசேகரன் : நேற்று நான் சொன்ன விவரங்களை சபையிலே நீக்காமல், நாங்கள் வெளிநடப்பு செய்ததை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு என்ற அறிக்கையிலே நீக்கி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளி நடப்புகள் சுருக்க வெளியீட்டிலே எப்போதும் வந்தது இல்லை. சுருக்க வெளியீட்டில் அதைச் சேர்ப்பதும் வழக்கம் இல்லை, அந்தப் பிரச்சினையை இங்கு எழுப்ப வேண்டாம்.

[முற்பகல் 10.20]

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நடக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி செய்தித்தாள் என்ற குறிப்பில் தினம் அங்கத்தினர்களுக்கு அச்சடித்து அனுப்புகிறீர்கள்.

நேற்று 'சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தின் அருகில் திரு. இராஜசேகரன் அவர்கள் தாக்கப்பட்டது குறித்து, பல உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்தார்கள். நானும் என். எஸ். வி. சித்தன் அவர்களும் சேர்ந்து தீர்மானத்தைக் கொடுத்திருந்தோம். நேற்று படிக்கும்போது என் பெயரைத் தாங்கள் விட்டு விட்டீர்கள்? என்ன காரணத்தால் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றே சேர்த்தாயிற்று.

திரு. கே. எம். தங்கமணி : துறை வெளியிட்டுள்ள 'செய்தித்தாளில்' என்னுடைய பெயர் இல்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது 'டைப் மிஸ்டேக்'. அதை சேர்த்துக்கொள்ளலாம்

* * * * * *

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 54-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து ஒரு மாத காலம் ஆகிறது. காலை பத்து மணிக்கு இங்கே தகராறு செய்பவர்களுக்குத்தான் கவன ஈர்ப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றால் எங்களைப்போன்ற உறுப்பினர்களின் நிலைமை என்ன ஆவது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சில நேரங்களில் அப்படியாகி விடுகிறது, என்ன செய்ய முடியும்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் சொல்ல விரும்புவது மிகவும் முக்கியமான விஷயம். திருச்சியில் சுமார் 20,000 பீடித் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு இரண்டு மானியங்களை எடுத்துக்கொண்டு அவையிலே விவாதிக்க இருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, எல்லோருக்கும் வாய்ப்பு கொடுத்தீர்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் கேட்கிறார்கள் , என்று கேட்க வேண்டுமென்றால் நேரம் ஆகிவிடும். என்னுடன் உறுப்பினர்கள் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * * * * * *

திரு ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கச்சத் தீவிலே நாம் கலந்து கொள்வதைத் தடுப்பதற்காக இலங்கை அரசு போட்டிருப்பதைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். மூன்று நாட்கள்தான் அங்கே திருவிழா. நேற்று விழா ஆரம்பித்திருக்கிறது, நாளை ஒரு நாள் தான் பாக்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நாளைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைத்தான் எடுக்கிறோம்.

* * * * * * *

இருக்கின்ற நேரத்திலே இவ்வளவுதான் செய்ய முடியும். இதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) கவன ஈர்ப்புகள்.

சேலம் கூட்டுறவு சக்கரை ஆலை ஒப்பந்தக்காரர்களிடம் கரும்பு எடுத்துக் கொள்வது

அடுத்து, 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. ரா. பெரியசாமி,. திரு. ரா. பெரியசாமி இருக்கையில் இல்லை ; எனினும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையை பேரவைக்கு அளிக்கலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.